
இருமாத கவிதை இலக்கியச் சஞ்சிகை

# பேனா

01

செப்டம்பர் - ஒக்டோபர் - 2010




50/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேனா நேர் கோட்டில் பேசும்



**திருமலை நவம்**

திருமலை நவம் என்ற புனைப்பெயர் கொண்ட சி. நவரத்தினம் அவர்கள் 1966ம் ஆண்டு வீரகேசரியின் சகோதரப்பத்திரிகையான ஜோதிப் பத்திரிகையில் சிறுகதை "பாசவிளக்கு" என்ற பெயரில் எழுதியதன் மூலம் எழுத்துலகிற்குள் பிரவேசித்தவர். சாண்டிக்கோ சுப்பிரமணியம் என்பவருடன் இணைந்து ஆனந்தி என்னும் கையெழுத்துப்பத்திரிகையை 1966ம் ஆண்டு நடாத்திவந்துள்ளார். ஈழத்தின் பத்திரகைகளான வீரகேசரி, தினகரன் இந்திய சஞ்சிகையான விடியல், இலங்கையிலிருந்து வெளிவந்த குமரன் சஞ்சிகை போன்றவற்றில் நூற்றுக்கணக்கான கவிதைகள் எழுதிவந்துள்ளார்.

திருமலை நவமும் பால சுகுமாரும் இணைந்து திருகோணமலையின் நாடகப் பாரம்பரியம் என்ற நூலை எழுதியுள்ளார்கள். புதுக்கவிதை வாக்குவாதப்பட்டு, வளரமுற்பட்ட காலத்தில் புதுக்கவிதை வளர்ச்சிக்கு பூரண ஆதரவு நல்கி இலங்கையில் புதுக் கவிதை வேரூன்ற உழைத்த புதிய தலைமுறைக் கவிஞர்களில் இவரும் ஒருவர்.

நோர்வே தமிழ்ச்சங்கம் சர்வதேச ரீதியாக நடாத்திய நாடகப் பிரதி ஆக்கப்போட்டியில் இவர் எழுதிய "பிச்சாபாத்திரம்" என்னும் நாடகம் இரண்டாம் பரிசு பெற்றது. நவீன நாடகஉள்ளீடுகள் திருகோணமலையில் வளர்ச்சிஅடையாத காலப்பகுதியில் திருகோணமலை இந்துக்கல்லூரி பரிசளிப்பு விழாவிலும், மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, புனித சூசையப்பர் கல்லூரியிலும் இவர் நெறியாள்கை செய்து மேடையேற்றிய மஹாகவியின் "புதியதொரு வீடு", "விடிய இன்னும் நேரமிருக்கிறது", "பூக்காத நட்சத்திரங்கள்", பேராதனை தமிழ்ச்சங்க நாடகப்போட்டியில் மேடையேற்றிய தாமு சிவராமுவின் "நட்சத்திர வாசி" ஆகிய நாடகங்கள் நவீன நாடக வளர்ச்சிக்கு திருகோணமலையில் ஊன்று கோலாக இருந்தது.

விமர்சனம், ஆய்வு ஆகிய துறையிலும் நாட்டமுடைய நவம், ஈழத்திலுள்ள பல இலக்கிய நூல்களுக்கு விமர்சனம் எழுதியுள்ளார். திருகோணமலை முன்னோடிகள் கலை இலக்கிய விமர்சகர் குழுவின் (1970-1974) பிரதான அங்கத்தவராக இருந்து பல விமர்சனங்களைச் செய்து வந்துள்ளார்.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாகத் தேடி எடுத்து ஆய்வு செய்த திருகோணமலையின் 400 வருட கலை இலக்கிய ஆய்வு கொண்ட பிரதேச இலக்கிய வரலாறு குமரன் அச்சக வெளியீடாக விரைவில் வெளிவரவிருக்கிறது. திருகோணமலை இந்துக்கல்லூரி, பேரதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் பேராதனைத் தமிழ்ச்சங்கத்தின் தலைவராக இருந்து அதன் பொன்விழாவை பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் சிறப்பாக கொண்டாடியவர். அண்மையில் அவுஸ்திரேலிய தமிழ்ச்சங்கம் உலகளாவிய ரீதியில் நாடாத்திய கவிதைப் போட்டியில் நவம் இரண்டாவது பரிசைப் பெற்றுக்கொண்டார்.

திருகோணமலை உவர் மலை விவேகானந்தா கல்லூரியின் அதிபராக 16 வருடங்கள் கடமையாற்றி, முதன் முதல் புலமைப்பரிசில் பரீட்சை, உயர் தரப்பரீட்சை, சாதாரண தரப்பரீட்சை ஆகியவற்றில் தேசிய மட்டத்தில் முதலிடத்தைத் தனது கல்லூரி மாணவர்கள் பெறவைத்தார். இருமுறை சிறந்த அதிபருக்கான தேசிய விருதையும் ஜனாதிபதியின் பாராட்டையும் பெற்றவர். திருகோணமலை மாவட்டத்தில் நவீன கலையரங்கொன்று இல்லாத நிலையில் உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் நவீன வடிவிலும் நவீன மின்னமைப்பும் ஒலியமைப்பும் கொண்ட கலையரங்கொன்றை நிறுவி இலங்கையில் எப்பாடசாலையிலும் இல்லாத அளவு நிறுவிக்காட்டியவர் நவம்.

ஈழநாடு, தினபதி சிந்தாமணி, வீரகேசரி ஆகியவற்றின் பிரதேச நிருபராகவும் கடமையாற்றியவர் திருமலை நவம். திருகோணமலை அதிபர் சங்கத்தின் தலைவராக 2001ஆம் ஆண்டு தொடக்கம் 2007ஆம் ஆண்டு வரை பதவிவகித்துள்ளார். தொடர்ந்தும் இவர் இலக்கியப் பரப்பில் பலசாதனைகள் புரிய வாழ்த்துகிறது பேனா.

**சிறகுவெளி**

**"பேனா" உமர்றி வீதி,**
**மகரூப் நகர், கிண்ணியா-03.**

**பேனாவுலகப் பிரியர்களின் சுயவிபரங்களைச் சிறகுவெளியில் பிரசுரிக்கச் சித்தமாயுள்ளோம். உங்கள் இலக்கிய வாழ்வு பற்றியதான விபரங்களுடன் படைப்பின் பிரதியொன்றையும் எமக்கு அனுப்பி வைக்கவும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேனா

இரு மாத கவிதை இலக்கியச் சஞ்சிகை

எழுத்து - 1 மொழி - 1

பிரதம ஆசிரியர்:

கிண்ணியா - ஜே.பிரோஸ்கான்

இணையாசிரியர்கள்:

ஏ.எம்.எம். அலி

ஏ. நஸ்புள்ளாஹ்

முன் அட்டை ஓவியம்:

ஏ.எஸ்.நிஸ்வர்

பக்க வடிவமைப்பு:

இ. ஜபறுள்ளாஹ்

வெளியீட்டகம்:

பேனா பப்ளிக்கேஷன்



பேனாவின் உறவுகளுக்கு:

" பேனா "

உமர் (ரழி) வீதி, மகரூப் நகர்,

கிண்ணியா-03, இலங்கை.

தொ.பேசி:0779300397

sfmail.kinniyans.net

email:ijafarullah@yahoo.com



சந்தா விபரம்:

தனிப்பிரதி ரூபா 50/=

ஆண்டுச் சந்தா ரூபா 480/=

காசுக்கட்டளை அனுப்ப வேண்டிய முகவரி:

ஜே. பிரோஸ்கான்,

கிண்ணியா, அண்ணல் நகர், தபால் கந்தோரில் மாற்றக் கூடியதாக அனுப்ப முடியும்.

ISSN 2012-7561


## பேனா பேசுகிறது....

தற்போதைய நவீனத்துவத்தினூடே இலக்கியம் செய்யும் நீங்கள் புதியவற்றை விரும்புகின்ற மனவுணர்வுடன் சுறு சுறுப்பாகச் சுழலுகின்ற உலகில் பல பழையதுமான தளத்திலிருந்து விலகி உங்கள் முகவரியை அடையாளமாக்க துடிக்கின்றீர்களா?

நாங்கள் முதன் முதலாகக் கிண்ணியா விலிருந்து பேனா கொண்டுவருகின்றோம் புதுமை படைக்க கரம் நீட்டி அதை வாங்கிப்புகழ் பரப்ப எண்ணமா?

எம்முயற்சியின் நதியில் இதோ ஆழமிக்கப் படைப்புகளுடன் வந்து இணைந்து ஓடிக்கொண்டே பெருமூச்சு விடலாம். நீங்கள் தயாரா?

காலத்துக்கு காலம் போய் நிமிடத்திற்கு நிமிடம் மாற்றம் நிகழும் இன்றைய சுழற்சியில் நாமும் புதிய புதிய முயற்சிகளோடு ஒன்றிணைந்து உருவாக்கம் பெறுவதே காலச்சிறந்ததாகும்.

எனவே எழுத்தாளர்களே! கவிஞர்களே! ஆர்வலர்களே! படைப்பாளிகளே! விமர்சகர்களே! கிண்ணியாவின் இலக்கியப் பரப்பில் விதை தூவி முளைத்து வளர்ந்து பூத்துக்காய்க்க நாங்கள் இட ஒதுக்கீடு செய்யக் காத்திருக்கிறோம். காத்திரம் நிறைந்த வாழ்வியல் செய்ய விரும்புவோருக்காக.

ஆகவே இன்றே எம் பேனாவின் புதிய பயணத்தில் இணைந்து கொள்ளுங்கள். அன்போடும் ஆவலோடும் காத்திருக்கிறது எம் பேனா...!

- ஆசிரியர் -

பேனாவுடன் பேசுகின்ற ஒவ்வொரு படைப்பாளிகளின் கருத்துக்களுக்கும் அவ்வந்தப் படைப்பாளிகளே பொறுப்பாளிகள் (ஆசிரியர்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணாத்திகளே!

எஸ்.பாயிஸா அலி



எரித்த படியும் ....
எரிந்த புகையூதிய படியுமாய் ...
தடதடத்து நகரும் ரயிலோசையினூடே
சிரிக்கும் உன்குரல் விரலசைத்த படியே
மெல்லத் தேய்ந்து மறையும்.
பிறகான கணங்களோ சடமாகி
உறையும்.
சமையலும் சலவையும் பரிமாறலுங்கூட
நிச்சயிக்கப்பட்ட அதன் பயணப்பாதை
வழியே நிகழ ...
உசிரு மட்டும் தண்டவாளங்களை
உரசியுரசித் திரும்பும்.
ஒரு நாள்
நீ மீளுவாய் நம் வாசலுக்கு.
நேற்றையப் புன்னகையின் திரா
நறுமணங்களோடு.
காற்றிலே மிதந்து வந்த உன்
கால்தடங்களில்

சட்டகத்துச் சுவரோவியம் மறுபடியும்
உயிர்க்கும்
கசங்கிய பொதியாய்க் கவிழும்
பயணக்களைகளை மீறித்ததும்பும்
பார்வைகளின் பரவசங்களுடே ...
கடிகார முட்களைக் கழற்றி வீசிய படி
நீ சந்தித்த வேற்றுமுகங்களைச்
சலசலத்தோடிய வெள்ளி நதிகளைச்
சுவாசங் குளிர்த்திய நந்தவனங்களை
இன்னமும் ... உன்
சாதனைகளைச் ... சந்தோசங்களைச்
...
சங்கடங்களைச் ... சலிப்புகளையென
இடைவிடாது ஒப்புவிப்பாய் ...
இளையமகளின் பாவனைகளோடு.
குதித்துப் பாய்ந்த அவ்வார்த்தைகள்
ஒவ்வொன்றுமே
வண்ணப்பூச்சிகளாய் உருமாறி
எம்மைச்சுற்றிச் சுற்றிச் சிறகசைக்கப்
பிள்ளைப்பருவத்து நாமுமதன்
தோப்புக்குள்ளே
மேலுமிரு வண்ணாத்திகளாய் ...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரித்துண்டால் எழுதிய சுவர்க்கவிதை

- நாஸீக் மஜீத் -

நினைவுகளெல்லாம்
அவைகளை நோக்கியே நீள்கிறது
காலங்கள் கடந்தும்
அவைகள் பற்றிய
கவிதைகள் பின்னிக்கொண்டிருக்கிறது வாழ்க்கை.

நேற்றைய மகிழ்வுகளை....
நேற்றைய கவலைகளை....
இன்னும் போர், காயங்கள்....
வலிகள், நேசங்கள்....
இன்னும் எழுத மறந்தவைகள்....

பனிதுளிர்க்கும் அந்த ஞாபகங்களில்
சில பூபாளங்களும்
சில முகாரிகளும்
முகம் காட்டிப் போகிறது
சிலது முக்காடிட்டுக்கொள்கிறது.

கனவுகள் மண்டிப் போன
இன்றைய நாட்களைப் போல
எதிர்பார்க்கைகள் எதுவுமற்றது
அன்றின் வெள்ளைப் பொழுதுகள்
அவை குறித்து
எழுத மறந்த எத்தனையோ கவிதைகள்
எனக்குள் செத்துக் கொண்டிருக்கின்றன.
தலைப்புக்கள் மட்டும்
தனித்துப் போனபடி....

நிறைய முசுப்பாத்திகளை சுமந்திருந்த
அந்த நிமிடங்கள்
ஒற்றையடிப்பாதை வழியே
திரும்பிப்பார்க்காது போயிற்று.
நினைவுகள் மட்டும்
எஞ்சிக் கிடக்கிறது.

இன்றை நாள் பொழுதுகள்
அதன்பாட்டில் போய்க்கொண்டிருக்கிறது
எனினும்
கரித்துண்டால் எழுதிய
சுவர்க்கவிதையாய்ப்
பாதிஅழிந்தும் மீதி அழியாமலும்
நிறம் மங்கிக் கொண்டிருக்கிறது
நேற்றின் தழும்புகள்....!



# எங்கள் வெள்ளாமை

சாப்பாட்டிற்குச்
சம்பா விதைத்திருக்கின்றோம்
மானாவரி மனசு வைத்தால்தான்
தெரியும்
பதர்க்கடையா?
நகைக் கடையா? என்று...
கலப்பைக் கூலியும்
காணிப்பங்கும் போக
எஞ்சிய நெல் மூடைகளுக்கு
இயல்பற்ற மகிழ்ச்சி
பட்டப் பெயர் சூட்டும்
"இம்முறையும் நஸ்டம்" என்று,
கொடலைப் பருவமென்று
கடன் வாங்கினோம்
காதுப்பூவை அடகுவைத்து
பசளையும் வாங்கினோம்
கைம்மாத்துக்கு கவலையை
வாங்க எவருமில்லை
என்பதுதான் புதினம்..?
பள்ளப் பகுதியில் பறவாயில்லை
வழக்கமான தாலாட்டை
வாப்பா வாசித்தார்
இம்முறையும் தங்கச்சியின்
அத்திவார வேலைகள்
தள்ளிப் போகலாம்...?
குடில் தேத்தனியும்
டோர்ச் லைட்டும்
குளிர்நடுங்கும் மார்கழியும்
பன்றிக் காவலும் பரவசம்தான்,
இன்னுமா நான் சொல்ல
இந்தக்காலத்து
வெள்ளாமையை...?

நியாஸ் முஸாதிக்



# துணை

எஸ். பி. பாலமுருகன்

பழஞ்சோறு போதும்
பசிமறக்கச் செய்ய...

பச்சை மிளகாயும், வெங்காயமும்
கடித்தபடி
உறிஞ்சிக் குடிக்கிறேன்
பக்கம் அமர்ந்து
எனக்கு அவள்
ஊறுகாயை தொட்டுக்க
நீட்டினாள்

அவளின் கண்களைப் பார்க்கிறேன்
கலங்கியபடி சிரிக்கிறாள்
ஒரு வாய்ப் பழஞ்சோற்றை
அவளுக்கு ஊட்ட — அவள்
கண்கள் பழஞ்சோற்றுக்கு
உப்பிடுகிறது...



# முரண்பாடுகள் காண்டிய உடன்பாடு


திருமலை ஏ.ஜே.எம். சாலி



புரிந்து கொள்ளலுடன் தான்
புறப்பட வேண்டும்
நமது புதிய பயணம்
ஏனென்றால்...
இரண்டு தசாப்தங்களுக்கு மேல்
இருண்டு போனது இங்கு
இளையோர் பலரின்
வாழ்க்கை
நசுங்கிப் போனது நம் பலரின்
பாதுகாத்த பாரம்பரியங்கள்.

முற்றிப்போன
முரண்பாட்டு முடிச்சுகளுக்குள்
சிக்கிப்போனோம்
உடன்பாடு காணமுடியாமல்
உடைந்து போனோம்
புல்லை நேசிக்கும் பனித்துளிக்கும்
பூவை நேசிக்கும் வண்டுக்கும்
உள்ள உடன்பாடு கூட
மனிதர்களாகிய நமக்கில்லாதது தான்
இங்கு
பதிவில் பத்திரப்படுத்த வேண்டிய
புதிய செய்தி.

நாளாந்தம் நமது வாழ்க்கைக்குள்
நமக்கு நாமே
வளையமிட்டு வரையறை செய்கின்றோம்
மனங்களை நேசிப்பதை விடுத்து
மனிதத்தை ரத்த நாளத்துக்குள்
பச்சை குத்திக் கொள்வோம்!!



மதியை வெளியேற்றும் மதுவினால்
மறைந்து போகுமே மனிதப்பண்புகள்
காலப்போக்கில் மனிதவுடல்கள்
தாளமில்லாமல் நடனமிடும்!

நல்ல பாதைகள் கூட
கறடு முரடாக மாறும்!

தாயின் காலடியில் சுவர்க்கம்
தேடுவதை
மறக்கப்பண்ணும் "மது"!
பிறரின் காலடியில்
வீழவைக்குமே "அது"!

இரவு சாம்ராஜ்ஜியத்தில்
கரமேந்திய கோப்பைகள்
கட்டுமே கற்பனைக் கோட்டை!
விடிந்தால் வீழ்ந்து தூளாகுமே
கட்டிய மனக்கோட்டை!
காரணம் மதுக்கோப்பை!

இதுதான் மது!
எண்ணிப் பாரடா!
நீயுன்ன... உண்ண...
வாழ்வே பாழடா அதை
எண்ணிப் பாரடா!

# மது என்பது!

-கோவை ஷன்சார்-
கொழும்பு 12.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.எம். அலிஅக்பர்
(முன்னாள் அதிபர்)

# உயிர் நண்பன்



கிண்ணியா சம்மாவச்சதீவுப் பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இபாஸ், திருகோணமலை சாகிறா மஹா வித்தியாலயத்தில் உயர்கல்வி கற்கச் சென்றான். பிறப்பால் அவன் கரிய நிறமாகத்தான் பிறந்தான். அதனால் வகுப்பு மாணவர்கள் இபாஸை "கறுப்புக்காக்கா" என்று அழைத்து கேலியும் செய்தார்கள்.

தன் நோக்கமோ உயர்கல்வி கற்க வேண்டுமென்பது அதனால் அவன் தன்னைக்கேலி செய்வதைப் பெரிதாக எதுவும் எண்ணாமல் படிப்பிலேயே கவனம் செலுத்திக் கொண்டிருந்தான் இபாஸ். காலப்போக்கில் வகுப்பு மாணவர்கள் இபாஸுடன் நன்கு பழகி பரீட்சயமாகி இபாஸ் என்றே அழைத்தார்கள். ஆனால் பணச் செல்வத்தில் புரண்டு கல்வி கற்கும் றிசாட் மட்டும் இபாஸை கறுப்புக்காக்கா என்றே தொடர்ந்தும் கேலி பண்ணி வந்தான்.

நண்பர்கள் சிலர் றிசாட்டிடம், இபாஸைக் கேலி செய்யாதே! இறைவன் படைப்பு அது, என்று சொல்லியும் அவன் கேட்பதாகவே இல்லை. காலங்கள் சில ஓடி மறைந்தன, இபாஸ் க.பொ.த சாதாரண வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அன்று ஞாயிற்றுக்கிழமை றிசாட்டுடன் அவன் நண்பர்கள் சிலர் திருகோணமலை நகரசபைக்கு பக்கமாகவுள்ள கடலில் குளித்து மகிழ்ந்துகொண்டிருந்தார்கள்.

நீச்சல் தெரியாத றிசாட் தன்னையுமறியாமல் சிறிது ஆழத்திற்குச்சென்று தத்தளித்துக் கொண்டு "காப்பாத்துங்க! காப்பாத்துங்க!" என்று அலறினான். நண்பர்கள் எவருக்குமே காப்பாற்றும் எண்ணமே இல்லை. ஏனென்றால் அவர்களில் எவருக்கும் நீந்தத் தெரியாது. தற்செயலாக அங்கு வந்த மாணவன் ஒருவன் படுவேகமாக நீந்திச் சென்று றிசாட்டின் தலைமுடியைப்பிடித்த வண்ணம் அவனைக் கரையில் கொண்டுவந்து சேர்த்தான்.


உதவியவன் வேறு யாருமில்லை தனது கிராமத்திலுள்ள ஆற்றில் நன்கு நீந்தக் கற்றுக்கொண்டவனான இபாஸ்தான். இரண்டொருவர் வந்து முதலுதவி செய்ததும் சுய நினைவுக்கு வந்தான் றிசாட், அதன் பின்னர்தான் அவ்விடத்தை விட்டும் அகன்றான் இபாஸ்.

என்னைக் காப்பாற்றியது யார் என்று கேட்கவும், அதோ செல்கிறானே உன்விரோதி கறுப்புக்காக்கா அவன்தான். அவன் தற்செயலாக வந்திருக்காவிட்டால் இந்நேரம் உன் கதி என்ன ஆகியிருக்குமோ, என்றதும் உடனே றிசாட் எழுந்து இபாஸ்.. இபாஸ் என்றோடினான். இபாஸின் காதில் விழுந்ததும் திரும்பியவாறு இல்லை றிசாட், என்னை கறுப்புக்காக்கா என்றே கூப்பிடடா! அதுதான் எனக்கு மகிழ்ச்சியா இருக்கிடா! என்றான்.

– ஒரு பக்கக் கதை –
நீங்களும் எழுதலாம். காத்திரமான கதைகள் இங்கே பிரசுரம் செய்யப்படும்.
(ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசமல்ல இது!

நரி ஊளையிட்டு
நாவறண்டு போனது
அநியாயத்திற்கு ஊர்க்கோடியில்
இன்னும்
அமைதிகாத்த தவம்!

பேய் குடி கொண்டதாய்
இதுகாலமும்
முரட்டுத்தனமாக நம்பப்படும்
ஆல மரத்தின் உச்சியிலே
அது என்ன சப்தம்!
மரியாதை செய்யப்படாமல்
நேற்று
மரித்தவனின்
பாதி எரியூட்டப்பட்ட
பிரேதத்தின் பின் மண்டையில்
ரத்தமின்னும்
பிசுபிசுக்கின்றது!

வாடை பிடித்துப்
பேசித்துயருறுபவனுக்கும்
வாய்க்கரிசி
இருந்தும் மௌனங்களூடு
நெடுகப்பயணம்
இதயத்தை வதம் பண்ணுகிறது.

கூழாங்கல் ஏறி
குருதி கசியும் பாதங்கள்
நிறுத்தற் குறியீடுகளின்றி
நீண்டு செல்வது எதற்காக?
ஒற்றையடிப்பாதையினை
மிரட்டும் நிலவின் நிழலில்
இளைப்பாறக் கிடைக்குமா?
இடம் என்ற சந்தேகம்
அடுத்த நாள் வெயிலுக்கும்
அப்படியே பொருந்திவிடுகின்றது!

கனாக்காணும்
குருவிகளின்
கண்களை கொத்தியுண்ணும்
பருந்துகளிடம்
மனுநீதி போதிப்பது
மடமையின் உச்சம்.

சீழ் வடியும் நதியின்
காயத்திலிருந்து
வீசுகின்ற துர்வாடையை
சகித்துக் கொள்ளத்தான்
வேண்டும்
ஏனெனில்
இது உன் தேசமல்ல!!!

**கிண்ணியா சபருள்ளா**

வியர்தொழுகும் மழைப்பொழுது கவிதைத் தொகுப்பிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமை நினைவுகள்

செல்வி. நஸீஹா சம்சுபாத்,
ஏத்தாலை, புத்தளம்.

பள்ளிப்பருவத்தின்
பழைமையான
நினைவுகளில்
இன்று நான்

அ, ஆ முதல்
பல்கலைக்கழகம் வரை
ந(க)டந்து வந்த
பசுமையான
நிகழ்வுகள்
புத்தம் புதுசாய்
மனத்திரையில்
என்றும்...

பிரம்படிகளோடு
பின்னர்
சொல்லடிகளும்
பெற்று
பலமுறை அழுது
சிலமுறை வெட்கித்து
விட்ட தவறுகளை
நிவர்த்திக்கத் துடித்த
அந்த நாட்கள்...

பக்கத்திலுள்ளவன்
செய்த தவறை
உடனே
காட்டிக்கொடுக்கும்
பால்ய வயது முதல்
உயிர்த்தோழன் செய்யும்
தப்பையும் கூடத்
தனக்குள் மறைத்துத்
தமாஷாக இருக்கும்

வயதுபோன
உடலுக்கும்
இதயம் என்றும்
இளமையே...!
அதில் இரண்டறக்
கலந்திருக்கும்
பள்ளி வாழ்க்கையும்
இனிமையே...!



## வாசகர் வாய்மொழி / கேள்வி பதில்

மானுடத்தின் மேன்மைக்காய் எழுதிப் பேச
வந்துள்ள பேனாவின் வரவு கண்டீர்!
பூவிடத்தில் தேனருந்தப் போகும் வண்டு
போலுளத்தால் நாடிவரும் வாச கர்காள்!
உங்களது உள்ளத்தின் கருத்தை நீவீர்
உற்சாக முடனெழுத்திச் சேர்க்கும் காலில்
திங்களிரண் டைத்தாண்டி வரும்பே னாவில்
சேர்த்திடுவோம் நுங்கருத்தும் திகழ
வைப்போம்.!

சகல தொடர்புகளுக்கும்:

பேனா

கிண்ணியா ஜே. பிரோஸ்கான்
உமர்ரழி வீதி, மகருப் நகர்,
கிண்ணியா.
0779300397/ 0752203397
sfmail.kinniyans.net
email:ijafarullah@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு கொத்தும் காதல் கோழி...!

நீ!
சாகரம்
நான்
உன்
குட்டித் தீவு!

புன்னகைப் பூனைக்குட்டி
அள்ளிக்குதிக்கும்
சிநேகித வாசல்களில்
நீ விருட்சமாய்
நான்
உன்னைச் சுற்றும்
அடம்பன் கொடியாய்..


எனக்குள்
நீ விழ
உனக்குள்
நான் விழ
மொடலிங் பருவம்
காதல்
சொட்டச் சொட்ட

பூவே
உன்
நிலா விழிப்பார்வையில்
நமக்காய்
என் இதய ஆக்ராவில்
ஒரு
பனையோலை தாஜ்மஹால்.

இனி
காதல் கோழி
தினம்
நம்முள்
கனவு கொத்தும்.

அதோ..
நீயும்
நானும்
நினைவு நயாக்ராவில்
நிலவிரவில் குலாவி!

கிண்ணியா ஏ.கே. முஜாரத்





# ஊன்றுகோல்

சகதி பூத்த சாலையில்
சலனப்படும் என் வாழ்வு
உயிர்த்தெழத்
துடிக்கும் போதெல்லாம்
உயிர்நாடி
இறுக்கப்படுகிறது
மனசு ஊனமாகிற போது
என் எழுதுகோல்
ஊன்றுகோலாக.

நம்ஸியா கவிதைகள்
தர்கா நகர்

# தேடல்

தாய்க்கோழி
தன் குஞ்சுகளைத்
தேடுகிறது
அதற்குத் தெரியவில்லை
தன்குஞ்சுகள்
சற்று முன்
காகத்திற்கு இரையானது
பாவம் இன்னும்
அது தேடுகிறது
தேடிக்கொண்டே இருக்கிறது
தன் குஞ்சுகளுக்கான
இரையை
வாயில் கௌவிய படி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமழான்...
சுட்டெரிப்பதாய்ச்
சொன்னாலும்
கடைசிப் பத்தில்
இளசும் முதுசும்
வீடுகளாய்...
வீதிகளாய்...
கடைகளாய்...
வாடிய பயிர்களாய்
வலம் வருகின்றார்களே!
ரமழான்...
சுட்டெரிக்காமல் இதை
விட்டதேனோ?

பள்ளிக்கு முன்னால்
பள்ளிப் பாலகனுடன்
இடுப்பிலும் இதயத்திலும்
சுமைகளுடன்
கையேந்தும், இக்
கைம் பெண்ணுக்கு
இக்காலம் மட்டுந்தான்
பொற்காலம்.
எறும்புக்கும் இவளுக்கும்
சம்பந்தமுண்டோ?

தீனுக்கும்
சமூகச் சீருக்கும்
கட்சிக்கும் என
உடல், பொருள், ஆவி
கொடுத்து இயக்கம் வளர்க்கும்
நாம்...
பிச்சை ஒழிக்கும்
இயக்கம் மட்டும் ஏன்
இயக்காமல் இருக்கிறோம்.
மறு வாழ்வுக்குள்
இவர்களை
மனிதப் புனிதர்களாக்க
என்ன செய்யலாம்?

கையேந்தினால்
பிச்சை அளிக்கும்
நாம்...
இச்சையோடு
ஒரு முறையேனும்
அச்சமயத்தில்
விசாரித்தறிந்து
விளக்கம் கேட்டோமா?
தவிர்த்துக் கொள்ள
வழிதான் கூறினோமா?
பைஸா கொடுத்து
நைஸாக விலகி விடுகிறோமல்லவா?

நடந்து திரிய
முடியுமென்றால்
வீட்டுக்கு வீடு...
வீட்டுப் பொருட்கள்
விற்கலாமே!

ஆதரவற்றவரா?
பாத்திரம் கழுவித்
தரித்திரம்
போக்கலாமே!

வழிகள் ஆயிரம்
அடுக்கலாமே!
அக்கறை மட்டுமேன் இல்லை.
நாட்டுப் பிச்சைதான்
வீட்டுப் பிச்சைக்கு
வழி காட்டுதோ!...!...!



**ஆர். சதாத்** (ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெறிகள் படிப்பாய் நீ



மனக்கருத்தைச் சொன்னேன் மணம் புரிந்திடுவேனே
உன்னை என துறவாய் – அன்பாய்
தமக்குமிக வேண்டியதைத் தக்க சமயம்
சமப் பொழுதினிலே சம்பாசிப்பேன்.

எனக்குமுண்டு காதல் என துயிரே
மணம் புரிந்திடுவேன் – தனங்கொண்டு
வெறியால் சுவைப்பேறுன்னை நான்
நெறிகள் படிப்பாய் நீ.

எத்தனையோ காதல்கதையுண்டு கதைகளிலே
அத்தனையும் வாழ்வுண்டு ஆற்றிலே – கத்தி பொல்லு
வாளோடு செய்திடுவேன் வன் செயல்கள்
கள்ளி நீ ஏந்துவாய் காதல்.

முகஸ்துதியில் வேண்டாமே மூழ்கும் முத்தம்
சுகப் பிரவசமே வேண்டும் – சகலரும்
முஸ்பாத்தி செய்வதுதாம் முற்றாகத் துறந்ததுவே
முகூர்த்தியும் காரிருளில் மூழும்.

வாலாய எண்ணங்கள் வாழ்க்கைதனைப் பூஜிக்க
கோலஎழில் கொஞ்சும் கோதை – நிலவுலவி
கூத்தடிக்கும் இந்தக் காட்சியியே புன் முறுவல்
பூத்திடுமே காதலெனும் பூ.

கிண்ணியா
**ஏ. நஸ்புள்ளாஹ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காட்டு

கன்னியென் றெண்ணு கின்றேன்
கடிமனம் புரிய வந்தாள்.!
மன்னிக்க வேண்டு மென்றேன்
மணப்பது கூடா தென்றேன்.!
கன்னியாய் இருந்து கொள்ளு
கவிதையான் தீட்டு கின்றேன்.!
உன்னைநீ காட்ட வேண்டும்
ஒளித்திடல் வேண்டா மென்றேன்.!

சந்தனச் சிலைநீ ! ஆனால்
தழுவினால் பிழையா மென்றேன்.!
செந்தழல் தங்கம் ! அஃதை
தீண்டினால் மோச மென்றேன்.!
எந்தநா ளும்நீ என்முன்
இருந்திடு! உன்னைக் காட்டு!
சிந்துநான் நீட்டு கின்றேன்!
சிறப்புறு மன்றல் வேண்டாம்!

உச்சியி லிருந்து வுன்றன்
உள்ளங்ககால் வரையி லெந்த
மச்சமும் இல்லா நீயா,
மணந்திட எண்ணு கின்றாய்?
நிச்சயம் வேண்டா முன்னை
நீயழித் திடநான் ஒப்பேன்!
இச்சணம் இருக்கு மாப்போல்
இருக்கநீ வேண்டு மென்றேன்!
நானுனைப் பார்க்க வேண்டும்!
நாட்க ளாண்டாக வேண்டும்
தேன்றமிழ் கவிதை யாகச்
சிந்திட வேண்டும்! வையம்
வான்மழை கண்டு கண்டு
வாழுதல் போல எங்கள்
ஊனுடல் வாழ வேண்டும்
உன்கருத் தென்ன? என்றேன்!

உலகிலே எங்கும் கேளா
உரைகளைக் கேட்கவா நான்?
கலகலப் போடு வந்தேன்!
கவிஞரே, நிறுத்து மென்றாள்
விலகிப் பார்த்தேன்! ஆனால்
விட்டபா டில்லை! வேட்கைப்
பலமுடன் என்னை நோக்கிப்
பாய்ந்தனள்! கனவு போய்ச்சே!

அ. கௌரிதாசன்
ஆலங்கேணி கிழக்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பணம் தின்னும் காலம்

சிறுகடை என்பது
உழைத்துச் சேமிக்கும் தொழிலல்ல!
அது ஒரு சிக்கனச் செலவு முறை
கணவன் உழைப்பதெல்லாம்
காசாக இருந்தால் லேசாகப் பறக்கும்.
பொருளாகக் கிடந்தால்
பொறுமையாக் கிடக்கும்.

அன்றாடம் உழைக்கிறது
ஐந்நூறு ஆனாலும்
ஆயிரந்தான் ஆனாலும்
அன்றைக்கே தீருமப்பா — அந்த
ஆச்சரியம் கேளுமப்பா!

தேயிலைக்குப் பத்துருபா
சீனி வாங்க முப்பதாகும்
பாண் இரண்டு — சின்னப்
பையனுக்கு பால்மா ஒன்று!

கால்போத்தல் லாம்பெண்ணைய்
காஞ்ச கொள்ளி நாலுதுண்டு
காலைத்தேத்தண்ணி
கணக்கு மொத்தம் இருநூறு.

தீப்பெட்டி பீடீன்னும்
சிரிப்பாரு மூத்தப்பா
அரிசிக்கும் கறிக்கும்
அதுவேற செலவப்பா.

சலவைத்தாளுக்கும்
சம்பு சோப்புக்கும்
செலவைக்கணக்கிட்டா
சேமிக்க ஏதிருக்கு!

பொருளாக் கிடந்தாத்தான் - இந்தப்
பிரயோசனம்!
காசாகக் கிடந்தால் — அதைக்
கடன்தீர்க்கணும்!

**ந. நியாஸ்**
- இடிமென் -

## அடிக்கடி கடி.. கடி..



டாக்டர் : பேஷண்டை நாளைக்கு அழைச்சிட்டு வாங்க போதை தெளியட்டும்.

பேஷண்ட் : இல்லே டாக்டர் அவர் குடிக்கிறதே கிடையாதே!

டாக்டர் : நான் என்னைப் பத்திச் சொன்னேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழியின் முகம்

***01. கேள்வி:*** இன்று ஈழத்தில் பேசப்படும் எழுத்தாளர்களில் முக்கியமான ஒரு நபராக நீங்கள் இருக்கின்றீர்கள். உங்களுடைய இந்த இலக்கிய உயர்வுக்கு ஈழத்துப் படைப்பாளிகளின் படைப்புக்கள் காரணமா? அல்லது தென்னிந்தியப் படைப்பாளிகளின் படைப்புக்கள் காரணமா?

***பதில் :*** நான் கவிஞனாவதற்குப் பாடசாலையில் இலக்கியம் "ஆ" பாடத்திட்டத்தில் பாடநூலாக இருந்த "யூசுப் - சுலைஹா" என்ற காவிய நூலே காரணமாயிற்று. இக்காவியம் தமிழ் நாட்டின் தலைசிறந்த கவிஞராகத் திகழ்ந்த, கவிஞர் திலகம் சாரண பாஸ்கரன் என்னும் புனைப்பெயர் கொண்ட ஓர் இஸ்லாமியக் கவிஞரால் இயற்றப்பட்டது. எனக்குக் கவிதைச் சுவையை அள்ளிப்பருக்கியது இக்காதற் காவியந்தான். எனது எழுத்தாளுமையை வளர்ப்பதற்கு நான் தேடல் முயற்சியில் ஈடுபட்ட பொழுதெல்லாம் எனது வாசிப்புக்குக் கிட்டிய இலங்கை - இந்திய எழுத்தாளர்களின் படைப்புக்களையும் படித்துள்ளேன். பள்ளிப் பேராசிரியர் பைந்தமிழ் பாவலர் அ. கி. பரந்தாமனார் எழுதிய "கவிஞராக" என்னும் கவிதை இலக்கணம் பற்றிய நூலே எனக்கு யாப்பிலக்கணம் சொல்லித்தந்தது. அத்துடன் தமிழ் நாட்டிலிருந்து வெளிவந்த இஸ்லாமிய சஞ்சிகைகளுக்கும் எனது வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் பங்குண்டு. அதே போன்று ஈழத்து சஞ்சிகைகளும் சிற்றிதழ்களும் தினசரிகளும் எனது எழுத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் உதவிபுரிந்தன, ஊக்கமூட்டின. ஆகவே எனது இலக்கிய வாழ்வின் வளர்ச்சிக்கு இரு நாட்டுப் படைப்பாளிகளினதும் ஆக்கங்கள் சமபங்கோடு உதவின என்றே சாற்றலாம்.

## தள்ளிவிட விருப்பமற்றுத் தான் கிடந்தானாம்

நடுநிசியை மணிக்கூண்டின் முட்கள் காட்ட
நயனங்கள் நித்திரையைச் சேய்மைக் கோட்ட
பருவிலியாய் ஆனேன் நான். கவிதை ஒன்று
படைத்துவிடும் முனைப்பினிலே ஆழ்ந்தேன் அன்று!

அந்திரா வேளைக்குப் பசுமை யூட்டும்
அம்புலியோ அமுதவொளி பாய்ச்சுக்காட்டும்
சந்திரனை முகிலூர்ந்துப் பிடிக்குங் கோலம்
சாளரத்தி னூடுகண்டேன் இரவுக் காலம்!

அம்புலியைப் பிடித்தணைக்கும் முகிலைப்பார்த்து
அமுதான ஒருகவிதைப் பாடப் போனால்
நம்அலியை இளங்காதல் விடவில்லையோ?
நல்லதமிழ்க் கவிஞனென்பார்! காதற் கென்பார்!

கார் அன்னக் கூந்தலெனத் தொடங்கி விட்டால்
கவிதை எழும்! அழகெல்லாம் அளந்தெடுக்கும்
பார்! வண்ணச் செம்மொழியால் அழகுச் சொல்லால்
பாவைதனைப் பாடுவதிற் பரவசந்தான்!

பரவசத்திற் பாடுகின்ற காதற் காலம்
பறந்திட்டு ஆதலினாற் காதற் பாட்டுப்
புதுரசத்திற் பாடுகின்ற வயதும் அல்லை
போதும்போ அக்காதற் பாட்டு வேண்டாம்.
என்றாலும் -

இந்திரனின் ஞாலத்தில் விளைந்த காதல்
இதிகாசக் கதையொன்று கூறக் கேண்மின்!
இந்திரனின் நெஞ்சினிலே ஆசைத் தீயோ
எழுந்தெரிய லாயிற்று! எவ்வா றேனும் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகலிகையை அடைந்தின்பம் அனுபவிக்கும்
அவனாசைச் சாதநீர் பெருகிற்றாங்கே!
ஆதலினால் அவன்கோழி ஆகிக் கொண்டு
விடியாத பொழுதொன்றிற் கூவி நின்றான்!

அகலிகையின் அருகினிலே படுத்திருந்த
மாமுனிவன் கோதமன் விழித்தெழுந்தான்!
பகலுதயம் ஆகுமுன்னம் விரைவோமென்றே
புறப்பட்டான் சந்தியாவந் தனத்தை நோக்கி!

முனிவனது வேடத்தில் இந்திரன், தன்னை
முழுமையாய் மாற்றினான் அங்கே சென்றான்!
அகலிகையின் அருகினிலே படுத்துக்கொண்டான்
அவளோடு அன்றிரவு இன்பங் கண்டான்!

தன்னோடு படுத்திருப்போன் கணவன் என்றே
தான், எண்ணிப் படுத்திருந்தாள்! அகலி கையும்!
என்னோடு படுப்பவனென் கணவன் அல்லன்
வேறொருவன் என்றுபின்னர் விளங்கினாலும் -

தள்ளிவிட விருப்பமற்றுத்தான் கிடந்தாளாம்
பெருங்காமச் சக்தியவள் தாழ்ந்திட்டாளாம்!
அன்னியெழ மாட்டாது அவளோ இன்பம்
துய்த்திட்டாள்! விருப்பத்தோடென்றே கம்பன்
சொல்லிவைத்திட்டானே இன்புற்றாளெனே!
சொல்லேரைச் சமைந்தகவி கம்பன் வம்பன்!



கலாபூஷணம் ஏ.எம்.எம். அலி

***02. கேள்வி:*** கவிஞரே! உங்களுடைய படைப்புக்களில் வாழ்வியலின் பின்புலம் தெரிகின்றதே...

***பதில் :*** மனித வாழ்வைப் படம்பிடித்துக் காட்டுவதுதானே இலக்கியம். எனது படைப்புக்களில் அந்தப்பின்புலம் தெரிவது வியப்பில்லையே!. இலக்கியம் உருவாவதற்கு ஆதார சுருதியாக அமைவதெல்லாம். அநுபவித்தவைகளும் உணரச்சி பூர்வமாக உள்ளம் நெகிழ்ந்தவைகளும் வெறுமைகளும் வெக்கைகளும் வேதனைகளும் தாம். இலக்கியம் சமூகத்துக்கோ தனிமனித வாழ்க்கைக்கோ தேவையான நியாயங்களைக் கொண்டுவரும் எழுத்துக்களாலான கருவியாகும். ஆகவே, அங்கே வாழ்வியற்கோலங்களைக் கூறும் பின்புலம்தானே தெரியும்.

***03. கேள்வி:*** கலாபூசண விருது படைப்பாளிகளுக்கு வழங்கப்படுகின்றதா? அல்லது அவர்களின் வயதுக்கு வழங்கப்படுகின்றதா?

***பதில் :*** நீண்டகால கலை இலக்கிய ஊழியத்திற்கான கௌரவிப்புத்தான் இந்த கலாப்பூஷண விருது. நீண்டகாலம் என்னும் போது அது அகவையைச் சுட்டுகின்றது. ஆகவே வயதும் படைப்பாற்றலும் இணைந்து இயற்றுகின்ற கலை இலக்கிய ஊழியத்திற்கான இந்தக் கலாபூஷண விருது வயதையுஞ் சேர்த்துத்தான் வழங்கப்படுகின்றது.

**ஆக்கம் + அகவை = கலாபூஷணம்**

**– ஜே.பீ –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையிலாத இயற்கை பார்த்தேன்



முனிறா சஜாத், கிண்ணியா

சோலைகள் சுமந்த பூவில்
சுகங்காணும் வண்டைப் பார்த்தேன்!
வாழைகள் விரித்த தண்டை
வளைக்கின்ற தென்றல் பார்த்தேன்!
கவலைகள் நிறைந்த வானில்
கண்ணீராய் மழையைப் பார்த்தேன்!
தவளைகள் இசையெழுப்பித்
தலைநீட்டும் எழிலைப் பார்த்தேன்!

வான் மீது வெண்ணிலாவும்
வருகின்ற வண்ணம் பார்த்தேன்!
பொன்னந்தி மாலை நேரம்
பொழிகின்ற அழகைப்பார்த்தேன்!
கரையோடு வந்து மோதிக்
கலக்கின்ற அலையைப் பார்த்தேன்!
இறையோனின் அருளாம் இயற்கை
அளிக்கின்ற எழிலைப் பார்த்தேன்!

தேன் சிந்தும் பூக்களெல்லாம்
தருகின்ற வதனம் பார்த்தேன்!
விரைந்தோடிக் கடலில் சேர
வருகின்ற நதியைப் பார்த்தேன்!
இரை தேடிச்சிறகடித்து
எழுகின்ற குயிலைப் பார்த்தேன்!
சுவனத்தை ஒத்த காட்சி
சுமந்திட்ட இயற்கை பார்த்தேன்!
செந்தாழம் பூவின் வாசம்
தருகின்ற சுகத்தைப் பார்த்தேன்!
சிந்தாத தேனைச் தேக்கிச்
சிவந்துள்ள கனியைப் பார்த்தேன்!
அந்தாதி பாடக்கேட்ட
அழகான சிகரம் பார்த்தேன்!
விந்தைகள் கோடி கோடி
விளைந்துள்ள புவியைப் பார்த்தேன்!
எந்நாளும் மாறிடாத
இணையிலாத இயற்கை பார்த்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூதூர் முகையதீனின் "ஒரு காலம் இருந்தது"



ஒரு காலம் இருந்தது
விலை 150.00
வெளியீடு:
மூதூர் கலை இலக்கிய ஒன்றியம்
நொக்ஸ் வீதி,
மூதூர் - 05.

"ஒரு காலம் இருந்தது" என்கின்ற அர்த்தமுள்ள முகத்துடன் மிக அழகாக வெளியிடப்பட்டுள்ள மூத்த எழுத்தாளர் மூதூர் முகையதீனின் கவித்தொகை நல்ல கவிதைகளைக் கொண்டுள்ளது.

மொழி அழகியல், நுண்மையான அனுபவம், வாசனைத் தூண்டல் என ஒரு நல்ல கவிதைத் தொகுதிக்கு அடிப்படையான தேடல் சார் அம்சங்கள் நிறைந்து நிதர்சனம் தருகின்றது.

மூதூர் முகையதீனின் நான்காவது கவிதைத் தொகுப்பு இது கவிதையை ஆயுதமாக்கிச் சமூகத்தின் ஆத்திரங்களைத் தனது கவிதைகளில் கவிஞர் தந்திருப்பதைக் கவனிக்க முடியும்.

## மிதுஹாவின் நந்தவனம் (ஜெனீரா தௌபீக், ஹைருள் அமான்.)



மிதுஹாவின் நந்தவனம்
விலை 150.00
வெளியீடு:
அருள் வெளியீட்டகம்
எகுத்தார் காஜியார் வீதி,
கிண்ணியா.

இலங்கையின் சிறுவர் பெண் படைப்பாளிகளில் ஜெனீரா அடையாளப்படுத்தப்பட்ட ஒரு சிறந்த படைப்பாளி வாழ்வியலின் அனுபவக் கூறுகளைச் சிறுவர்களின் பின்புலத்தைத் தொட்டுக் காட்டுவதாக மிதுஹாவின் நந்தவனம் சொல்லி நிற்கின்றது.

இன்றின் சிறுவர்களின் இயங்கு நிலையும் உறவுகளால் சிறுவர்கள் கட்டமைக்கப்படுகின்ற குடும்பத் தீவிரத் தன்மையையும் அகதி நிலைசார் தேடலும் மிதுஹாவின் நந்தவனத்திலிருந்து கிடைக்கின்றன.

ஜெனிராவின் இந்தச் சிறுவர் கதைகள் சிறுவர்ளுக்கு விருந்தாக அமைவதோடு புதிய வாழ்வியல் மாற்றத்தையும் சமூக அறிவியல் விடயங்களையும் பேசுவதாக அமைந்துள்ளது.

**பிரியமுடன்....** படைப்பாளிகளிடமிருந்தும் வாசகரிடமிருந்தும் படைப்புக்கள், விமர்சனங்கள், மாற்றுக் கருத்தாடல்கள், ஓவியங்கள், ஆலோசனைகள் என்பவற்றைப் பேனா கோரி நிற்கின்றது. படைப்பாளிகள் தங்களுடைய புதிய வெளியீடுகளின் இரு பிரதிகளை அனுப்பி வைத்தால் பேனா எழுதும் பேனாவின் வருகை பற்றி உங்கள் நண்பர்களுக்கு ஞாபகப் பரவலாக்குங்கள்.

"வாசற்படி"

உமர் (ரழி) ஒழுங்கை, மஃரூப் நகர், கிண்ணியா 03, இலங்கை.
தொ.பேசி:+940779300397



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்ப்பு



ஜெனீரா தௌபீக்,
ஹைருள் அமான்.

அவளுக்கு வீட்டிலிருக்கவோ, ஊரிலிருக்கவோ பிடிக்கவில்லை. இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு தன் வேதனை தீரும் மட்டும், சுவர் ஓரமாக உட்கார்ந்து அழுதாள். எவ்வளவு நேரம் அழுதாலோ, அவளுக்கே தெரியாது.

ஏய் ! என்னடி நீலிக்கண்ணீர் வடிக்கிறாய்....? எழுந்து பொலிஸ் டேசனுக்கு நட குரல் கேட்டுத் திடுக்கிற்று நிமிர்ந்தாள். வந்தவள், பெண் பொலிஸ் அதிகாரி என்பதை அறிந்து கொள்ள வெகு நேரமெடுக்கவில்லை. ஒரு கணம் இரத்தமே உறைந்து விடும் போலிருந்தது அவளுக்கு கண்களை முந்தானையால் துடைத்தவாறு எழுந்தாள்.

என்னடி யோசிக்கிறாய் .....? பிள்ளையைப் பெற்றாயா .........? அல்லது பிடுங்கி எடுத்தாயா ? உனக்குத் தாய்ப் பாசமே கிடையாதா ? கன்னத்தில் பளார்... பளார்.... என அறை விட்டாள் சுரேக்கா.

பொலிஸின் பின்னால் ஊரே திரண்டிருந்தது. ஒவ்வொருவரின் வாயிலிருந்தும் வசை மொழிகள் தங்கு தடையின்றி ஊற்றெடுத்துப் பாய்ந்தது. சுரேக்கா, அவளைப் பலவாறாக விசாரித்தாள். உங்களைப் போல் நானும் ஒரு பெண். என்னை நம்புங்கள் நான் சொல்வதைக் கேளுங்கள்.

எனது கணவர் மது போதையில் என்னை அடித்துத் துன்புறுத்துவார். அதைப் பக்கத்திலுள்ளோர் வேடிக்கை பார்ப்பர். நான் எங்கிருந்தோ வந்தவள் என்பதற்காக, எனக்காகப் பரிந்து பேச யாருமில்லை.

நாளுக்கு நாள் இவர் செய்யும் ஆக்கினைகள் அதிகரித்தே சென்றன. எத்தனை நாளைக்குப் பொறுப்பது? எனக்கு வந்த ஆத்திரத்தில் பக்கத்திலிருந்த பீங்கானை எடுத்து வீசினேன். அது மகளின் தலையில் விழுந்து இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. உடனே, பக்கத்திலுள்ளோர் என்னைப் பொலிஸில் புகார் செய்தனர்.

இதுவரை காலமும் வீட்டில் நடக்கும் யுத்தம் யாருக்கும் விளங்கவில்லையே! இப்போது மட்டும் எங்கிருந்து தைரியம் பிறந்தது? எல்லோருக்கும் நான் தண்டிக்கப்பட வேண்டுமென்பதே ஆசை என அழுதாள். அவள் கூறுவதிலும், மறைமுகமாக வாக்கு மூலம் பெற்ற மகளின் வார்த்தையிலும் ஒற்றுமையிருந்தது.

எனவே, அவளுக்கு விடுதலை கிடைத்தது. இனிமேல் உனது கணவன் மது போதையில் வந்தால்..... எமக்கு அறிவிக்கவும். கணவனின் கோபத்தில் பிள்ளைகளைத் தண்டிக்கக் கூடாது. என்பதையும் வலியுறுத்தினாள் சுரேக்கா.

**– ஒரு பக்கக் கதை –**

நீங்களும் எழுதலாம், காத்திரமான கதைகள் இங்கே பிரசுரம் செய்யப்படும்.

(ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலக் கவிதைகள்

செம்மொழித் தமிழ்ச் சோலையிலே பாட்டுக் கோகிலங்கள் பல ஒன்று கூடிவிட்டன. இதுவரையும் கவிதைகள் பல பாடிவிட்டன. அக்கவிதைகளை நிரைப்படுத்தினால் - மரபுக்கவிதை, புதுக்கவிதை, நவீன கவிதை வசன கவிதை, உரைவீச்சு, ஹைக்கூக் கவிதை எனப்பெயரிடலாம். இன்னுங் கொஞ்சக் காலத்தில் பொய்க்கூக் கவிதை என்றொரு புதுவடிவமும் தோன்றலாம்.

வடிவங்கள் மாறினாலும் உயிரோட்டமுள்ள கவிதைகள் - எஞ்ஞான்றும் கவிதைதாம். கவிதையின் வடிவமோ பெயரோ மாறிக் கொண்டதை இட்டுக் கவிதாவுலக வாசிகள் ஆருமிப்போ கச்சைகட்டிக் கொள்ள வில்லை. மாறாக எழுதுவதற்கான இச்சையைக் கூட்டிக் கொண்டார்கள் என்பதை இற்றைநாட் பிரசுரங்களைப் பார்த்தாற் புரியும்.

கவிதையை மேம்பட்ட பேச்சு என்றும் சொல்லலாம். ஏனெனில் நாம் இலக்கணச் சட்ட வரைபுக்குள்ளேயும் வெளியேயும் இருந்து கொண்டு பேசுகின்றோம். அம்மேம்பட்ட பேச்சே கவிதையாகின்றது. சட்டவரைபுக் குட்பட்டது மரபு. அப்பாற் பட்டது வரவு அதாவது புதுசு.

எனவே கவிதை பற்றிய பிரக்ஞையை மேன்மேலும் கூட்டுவோம். அறிவாற்றலைத் தீட்டுவோம் அப்போதுதான் எந்தக் கவிதையாயினும் மேம்பட்ட பேச்சாக இருக்கும். அது கவிதைக்குரிய தன்மையோடு சிறக்கும்!

"நான் ஒரு நூலைப் படித்தேன் அப்போது என் உடல் சிலிர்த்தது! என் தலை சுழன்றது! அது கவிதை நூல் என்பதை அப்போதே உணர்ந்தேன், என்று கவிதையின் தன்மை இதுதான்" எனத் திறம்படக் கூறுகின்றார் எமிலி டிக்கின்சன் என்னும் ஆங்கிலக் கவிஞன். ஆகவே உங்களில் உவகை பொங்கி, உடல் சிலிர்த்து, தலை சூழலக்கூடிய கவிதையைத் தரவல்லார் யார்? அவ்வாறு வரவல்லார் யார்?

**தும்மு. துரைமகன்**

ஆக, கால ஓட்டத்தில் கவிதை புதுக்கவிதையாக மாறிக்கொண்டது. புதுக் கவிதை ஓரிரு வரிகொண்ட ஹைக்கூக் கவிதையாகிக் கொண்டது. மாற்றங்கள் நிகழ்வதைத் தடுக்க வொண்ணாது. எனினும் செம்மொழியாம் தமிழில் வீச்சான மரபுக்கவிதைகளும், புதுக்கவிதைகளும் எழுதப்படாமலும் இல்லை. மேலும் எழுதப்படவும் வேண்டும். ஆகவே தலை சுற்றும் கவிதைகள் (இருண்மை சூழ்ந்த கவிதை) ஒருபுறம் இருக்க, கவிதைக்கலை முற்றிக் கனிந்த கவிதைகளாகச் செம்மொழிக் காவிலே கனிந்து குலுங்கட்டும் எதிர்காலக் கவிதைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோம்பேறிகள்


தொன்மையூர் கவிராயர்

எப்போதும்
கற்பனைக் கனவுகளைக்
கண்களில் நிறைத்து
தூரத்து வெண்ணிலவைத்
தூரத்திப் பிடிக்கப்
பறக்கும் மனசு.

நேரத்திற்கு நெடும்ப விடாமல்
சாளரம் வழியே வீசும்
பனிச்சாரலின் தூசுப்படலத்தைப்
போர்வைத்துணிக்குள்
நுழைய விடாமல்
போராடும் அவயவங்களுடன்
புரளும் கட்டைகள்.

நம்பிக்கை இல்லாத
நாளைய நாட்களை நம்பி
இன்றைய நாட்களை இழக்கும்
நாரைமனிதன்.

படிக்கும் பருவத்தில்
பாடங்களைப்
பரண்மீது பத்திரப்படுத்திப்
பரீட்சைக்காலத்தில்
பிறித்துப் புரட்டும்
புத்திஜீவிகள்.



வாசப்படிகள் ஏறி
வாக்குப்பிச்சை கேட்டு
ஊருக்கு உழைக்க
உத்தரவு வாங்கியவர்கள்
பாதுகாப்பு அரண்களுக்குட் பதுங்கி
உடுக்கை அடித்தாலும்
உறக்கத்தைக் கைவிடாமல்
அடுத்த தேர்தல் வரை
பத்திரமாய்த் தூங்கும்
உத்தமத் தலைவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளை வெறுக்காதே

வேதனை கண்டால் இறையை
வெறுப்ப தென்ன மனிதா?
சோதனை இயற்கை யன்றோ?
சோர்ந்து கிடக்க லாகுமோ?
சாதனை செய்ய உனக்கு
சந்தர்ப் பங்கள் இருக்கு
" பாதகன் " என்று அந்தப் -
பரனை இகழ்வது பாவம்

இன்னல் கொண்ட தால் நீ
" இறையிலை " என்கின் றாயடா!
கண்ணில் லாதொரு குருடனும்!
கடவுளை நம்பியுள்ளான்
சின்னப் புத்தியு டைய நீ
சிந்தித் திட நீ மறந்தாய்
தின்ன வழியில் லாததால்
திட்டு கின்றாய் இறையை.

தீராத பிணிகள் எதுவும்!
தீண்ட வில்லை உனையே
சீராக உன்னு டலமும்!
சிறப்பாய் இயங்கு கின்றதே!
பாராளும் இறைவ னல்லவா
பக்குவ மாயுனை, யைத்தான்
பேராக இதையெண் ணாமல்
பரனின் நன்றியை மறந்தாய்!

கேட்டது கிடைக்கா விடில் நீ
" கடவுள் இல்லை " என்பதா?
போட்டது முளைக்கும் சற்றுப் -
பொறுமை கொள்ள வேண்டும்
நீட்டிய கையில் இறைவன்
நிச்சயம் அருளைத் தருவான்

காட்டு அவனில் பக்தியை
கடவுளை வெறுத்துப் போகாதே!

**வி.எம் அன்சார்**
கிண்ணியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆஹா... காளையரே!

- கிண்ணியா - ஹஸன்ஜி -

உனக்கெதற்குக் கட்டிளம் காளையரே!
பிணக்கு வரும் கன்னியர் பின்னால்
இணக்கமில்லா காதல்வலை வீச்செதற்கு
மை விழி வெட் டில்சிக்காது தள்ளிப்போ

உனதுவழி இறங்கிவர செய் யழகுனரே
உழைத்துவை வளமான செல்வமதைத்
தனக் கெனத் தரணியிலே
வாழ்க்கைத் துணையாக அணிசெய்வர்

வீண்பேச்சு சும்மா விழல் நடிப்பு வீறாப்பு
போய்க்காட்டித் திரியாதே தெருவோரம்
பெறுமானமிக்க இளைஞர்கள் நீங்கள்
பெருமனதாய் ஒன்றுபட்டுழையுங்கள்

விட்டுவிடு விலகிநில்லு கெட்டுவிடர்
நல்வழியைத் தொட்டுவிடு துணிந்துசெல்லு
அட்டைப் படவிளம்பரமாய் ஆகாமல்
ஆஹா வெனப் பாராட்டும் பணிதொடரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாஞ்சோலை **யு. காலுதீன்**

பாசத்தின் பிழையில் ஒன்றுசேரா
பச்சைப் புல்லின் சுவட்டில் ஒட்டிக்கொண்ட
புழுக்களைப் போல்
இறக்கை முளைத்த கறையான்கள்
இன்னும் தோண்டுவது என்ன?
புற்றுக்களையா?

வாருங்கள் வாழ இடம்தெரிகிறது
வசந்த மலர்கள் எல்லாம் நிழல் தந்து
நிஜ வழியில் குளிர்மைதாக் காத்திருக்கிறது

ஓ! புயல் காற்று எல்லாம்
ஆரவாரம் ஆகிவிட்டது

காதுகளைச் துவட்டிச் சென்ற
நிதர்சன சத்த வெடிகளோ
இலங்கையின் ஓரத்தில் ஒதுங்கிவிட்டது

எல்லாமே இறையருள் ஒன்றே
வா சுதந்திரமாக இலங்கையில்
இன்றே சுற்றுவோம்.



# இலங்கையைச் சுற்றுவோம் வா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியோனிசத்தின்
சின்னப் பிஞ்சிகள் கூட
என் உணர்ச்சிகளில்
விசம் தடவிப் பார்க்கின்றார்கள்
என் சாதனைகளில்
சேறு பூசிப் பார்க்கிறார்கள்
என் கனவுகளில்
கல்லெறிந்து பார்க்கிறார்கள்
நான் மரித்துப் போய்விடுவேன்
என்ற அதீத நம்பிக்கையில்

சந்திரனும் சூரியனும்
சமுத்திரங்களும் எங்காவது
மரித்த துண்டா?
ஏய்! மேற்கத்தியனே
நான் சாதாரணமானவன் அல்ல
எரிமலைக்குள் பனிச்சறுக்குகள் செய்பவன்
நைல் நதிக்குள்
தீக்குச்சி எடுப்பவன்
மோட்டுத்தனமான சேட்டைத்தனத்திற்குப்
பிறந்தவன் நானல்ல
அறியாமைக்குச் சவுக்கெடுத்துச்
சரித்திரத்திற்கு மாலை
எடுக்கப் பிறந்தவன்
உன் வேர்களைப் பிடுங்கி
என் தேகத்தைப்
பருந்துக்கு விருந்தாக்கிப்
பாலஸ்தீனத்தை மீட்கும் வரை
இந்தப் போராட்டம்



தொடர்ந்து கொண்டே
இருக்கும் ஏனெனில்
என் உம்மாவிட்ட கண்ணீரின் நனைச்சலில்
நான் இன்னும் தூங்க வில்லை..!

# கொப்பளிக்கும் உணர்ச்சி

அர்சாத் அலி
காக்காமுனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லையடி



எஸ்.எம் நிஸ்வான்
மஹ்ரூப் நகர்

என்வாழ்வில்
சந்தோஷமென்பது
கருவிலே
கலைக்கப்பட்டு விட்டது

அறியாப் பருவத்திலே...
அடித்து வளர்க்கப்பட்டவன்
புரியும் பருவத்திலே
புதைக்கப்பட்டவன்.....
விளையும் பருவத்திலே
வீழ்த்தப்பட்டவன்.......

காதலும் கலைக்கப்பட்டுக்
கண்ணீரால் இதயம்
நிரப்பப்பட்டு....
மணவாழ்க்கை கூட..
மனசு ஒருத்திக்கும்....
மாலையொருத்திக்குமாக....

சுவாசிக்கும் காற்றும்
சுவாலையாக சுடுகின்றது....
நகரும் நாட்கள்
நரகமாய்க் கழிகிறது..!

கவலையும்
கஷ்டமும்தான் இப்போதைக்கு.....
வாழ்க்கையாய்...,!

இன்னொரு ஜென்மத்திலாவது
இதயத்தில் நின்றவளோடு
இணைந்து விட
இறைவனை வேண்டி
நிற்கின்றேன்...!

நிலையில்லாவுலகில்
நிம்மதியில்லை....
நீ யில்லா என்னுலகில்
எதுவுமே...
இல்லையடி!

# எழுத்தைத் தவமாகக் கொள்



ஜின்னாஹ் ஷரிபுதீன்

போர்வாள் தனிலும் பலங்கொண்ட தாகுங்காண்
சீரார் எழுத்தாளர் கைகொண்ட – கூர்முனைப்
பேனா எனப்புகன்றார் பண்ணவனின் தூதரெங்கள்
ஞானத் திருநபிக ளார்!

எழுத்தைத் தவமாக ஏற்றுப் பணிசெய்
ஒழுக்கம் தவறாதே ஓதும் – எழுத்ததனில்
தூய்மை இருக்கட்டுஞ் சற்றேனும் மாசுடைச்சொல்
வாய்ப்புறும் வாகு தவிர்

சத்தியத்தை யன்றிப்பொய் சாற்றாதே எஞ்ஞான்றும்
புத்திக்குத் தீனி படைத்திடுவாய் – வித்தகனே!
பேனா பிடிப்பவன்கை பாராளும் ஆட்சியையும்
காணாமற் போக்கும் பலம்

வீணே எழுத்தை விரயஞ்செய் யாதிருப்பாய்!
பூணுங் கருபிறர்பால் பாங்குறட்டும் – கோணா
எழுத்தாலே ஆக்கும்நூல் காலத்தாற் சாகா
வழுத்தும் உலகமுனைத் தான்!

சொற்சுருக்கம் ஆக்கத்தில் சீர்மைமே லோங்கவைக்கும்
கற்போர்க்கும் நன்றே கரங்கொடுக்கும் – பொற்புறுமே
ஆழ்கடலைப் பேழைக்குள் எஃகத் திணித்ததுபோல்
ஆழ்வதுதான் ஆற்றல் அறி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ அழகனாவது எப்போது?

உலகச் சத்திரத்தில்
விடை பெறும்
பிண்டம் நீ!
வளமிக்கக் கரங்களில்
வலு விழந்த
கைப்பிள்ளை நீ !
நான் யாரென்ற வினாவுக்கு விடை
தெரியாத புதிர் நீ!
ஆசைக் கோட்டைக்குள்
திசை தெரியாது
அழுந்தும் கைதி நீ!
மோசடிப் பாதையில்
குறி காட்டும்
வர்ணப் பலகை நீ!
குடும்ப நாடகத்தில்
குதூகலம் தொலைத்த
வில்லன் நீ!
பொறாமைத் தீயில்
கொலை வாள்
உரு(வா)க்கிய கொல்லன் நீ!
அன்பு இராச்சியத்தை
ஆளத்தெரியாத
கொடுங்கோலன் நீ

அங்கே பார்!
பசுமை உலகம்
தெரிகிறது அது
அஃறிணை உலகம்
அங்கே.........
பசி வெறியும்
பட்டினிச் சாவுமில்லை
ஏழைப் பறவையை
பணக்கார விலங்கை
பார்த்ததுண்டா
விலங்குகள்
விலங்காகவே
வாழ்கின்றன
பறவைகள்
பறவைகளாகவே
வாழ்கின்றன!
மனிதா நீயோ ....?
எழிலான அந்த ஏகன்
உன்னை அழகானவனாகப் படைத்தான்
மண்ணையும் விண்ணையும் வசமாக்கி
வசீகரமாக்கித் தந்தான்
நீயோ............
அசிங்கமாக்கி விட்டாயே
பொத்தி விரித்த கையோடு
சொத்து ஏதுமின்றிச்
சுத்தமாய் வந்தவன் நீ!
உனக்குத்
தங்கும் இடமிது
"தங்க" இடமல்ல
அங்கங்கள் நடாத்தும்
சேஷ்டைகளின்
அரங்கம் இது
அந்தரங்கம் அறிவாயோ?
அசுத்தவாதியே நீ
அழகனாவது எப்போது?

கிண்ணியா முத்தலிப்
(ஓய்வு பெற்ற அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகிய நாடு

அழகான மரம்மீது குரங்கொன்று பாயும்
அது கண்டு பறவையினம் பறந்தோடிச் செல்லும்
குயிலினமும் மெல்லிசையை நாற்றிசையும் பரப்பும்
தோகை மயில் தரைமீது அழகு நடம்புரியும்

கயலினங்கள் மோதுவதால் தாமரையும் அசையும்
கதிரவனின் கதிர் கண்டு தன் இதழை விரிக்கும்
முயலொன்று தன்பசியை புல்லுண்டு தீர்க்கும்
உண்டபின்பு பால்கொடுக்க குட்டிகளை நாடும்

வளமான மரநிழலால் நாடெங்கும் குளிரும்
அது தந்த சுகத்தினிலே மிருகங்கள் மகிழும்
மானினங்கள் நீர் அருந்த குளங்களை நாடும்
குளங்களிலே கொக்குகளும் நிறைந்து இரைதேடும்

கிளியினங்கள் மொய்ப்பதனால் பட்டமரம் தளிர்க்கும்
அதுபேசும் மொழிகண்டு உள்ளமது மயங்கும்
யானைகளும் தம்கையால் மரங்களினை ஒடிக்கும்
அதுகண்டு பறவையினம் அச்சமுடன் ஓடும்

தரைமீது பாம்பொன்று விரைவாக ஓடும்
அதுகண்டு குருவிகளும் பயந்தோடிச் செல்லும்
மயிலொன்று பாம்பதனைக் கண்களாலே காணும்
அப்பாம்பதனை கால்களாலே கவ்விப்பறந்தோடும்

மானொன்று பசும்புல்லை ஆர்வமுடன் மேயும்
அதைப்பிடிக்கப் புலியொன்று புதர்மறைவில் மறையும்
புதரருகில் மலைப்பாம்பு புலியுடலைச் சுற்றும்
புலிபோட்ட சத்தத்தால் மான் தப்பி ஓடும்

**கே.எம்.எம். இக்பால்.** (கலாநிதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேப்பர் பொயின்ட்

## மல்ட்டி சொப் என்ட் மல்ட்டி சேர்விஸ் சென்டர்

கிண்ணியா பிரதேசத்தின் கல்வி, சமூக, பொருளாதார அபிவிருத்தியினைத் துரிதப் படுத்துவதற்கு முயன்று கொண்டிருக்கும் கிண்ணியா வாழ் சகல தரப்பினருக்கும், அவர்களது இலக்கை அடைந்து கொள்வதற்கு அவசியமான அனைத்து சேவைகளையும், பொருட்களையும் பெற்றுக் கொள்வதற்கு இன்றே நாடுகள் மல்ட்டி சொப் என்ட் மல்ட்டி சேர்விஸ் சென்றர்,

### எங்கள் சேவை


ஓப்செட், ஸ்கிறீன் பிரின்டிங், போட்டோ கொப்பி, லெமினேட்டிங், புத்தகம் கட்டுதல், டேட், றப்பர் ஸ்டாம், டைப்செட்டிங்






### காரியாலய உபகரண உதிரிப்பாகங்கள்

பெக்ஸ் உதிரிப்பாகங்கள், போட்டோ கொப்பி உதிரிப்பாகங்கள், பிரிண்டர் உதிரிப்பாங்கள், கணனி உதிரிப்பாகங்கள்.





### காகிதாதிகள்

பாடசாலை, காரியாலய காகிதாதிகள், அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்களும் சஞ்சிகைகளும், மார்க்க சம்பந்தமான ஓடியோ, வீடியோ சீடிகளும், கெசட் நாடாக்களும்.

### அச்சக சேவைகள்

இலக்கிய வாதிகளினதும், எழுத்தாளர்களினதும் ஆக்கங்களான கவிதை, கட்டுரைத் தொகுப்பு, பாடசாலை வெளியீடுகள், காரியாலய அறிக்கைகள், மாதாந்த சஞ்சிகைகள், வருடாந்த மலர்கள், செய்தி மடல்கள் மற்றும் வினா விடை தொகுப்புகள், திருமண அழைப்பிதழ்கள், விசிடிங் காட்ஸ், பற்றுச்சீட்டுப் புத்தகங்கள், கலண்டர்கள், லெட்டர்கெட், வாழ்த்து அட்டைகள், சான்றிதழ்கள் முதலான அச்சக சேவைகளை தெளிவாகவும் தரமாகவும் குறைந்த விலையிலும் செய்து தரக்காத்திருக்கின்றோம்.

**இல:165, பிரதான வீதி, கிண்ணியா-04. 026-2236102, 2236325**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிலதும் பலதுமான சேதி!!

நேற்றின் ஞாபகிப்புக்களை விடாமல்
உரசிச் செல்லும் எனது வீட்டுப்பூனை
நங்கூரம் பாய்ச்சி நிறுத்திய படகுபோல்
கடலின் நடுவில் சமநிலையடையாமல்...
அசைவுகள் காட்டும் காற்றின் தீண்டலால்!

உச்சிக்கடலில் கூட்டமாய் நின்று
குலாவிப்பாடிய மீன்களுக்குள்
சிவப்புக் கசிவையேற்படுத்திய அந்நிய மூளையின்
ஜெயித்தலைக்கண்டு சந்தோசித்த மனிதன்

அடிக்கடி கண்களைக்குத்தித் துளைக்கும்
ஊசிக்கனவுகள் வரண்ட விழிகளுக்குள்
குருதியைக் கொட்டச் செய்யும்.
இம்......
வேண்டுமே! மூன்று தசாப்தம் இடைவிடாது
அழுது வடித்த விழிகளில் கண்ணீர்?

புழுக்களின் பரிணாமம் வண்ணத்திப்
பூச்சியென்று ஒன்றுக்கே!
ஈசலின் சிறகு உதிர்ப்பு
மீண்டும் வளர்வதற்கே!

பகலிரவாய்த் தோன்றும் கனவுகளில்
சிலது பலித்தும் பலது பலிக்காமலும்.
மீதிக்காய் துயில் கொண்டு
காத்திருந்திருந்த போது — தூரத்தில் ஊநயாண்டி.
செய்து மறைகிறது.....
நேற்றின் ஞாபகிப்புக்கள்!!

கிண்ணியா — ஜெ. பிரோஸ்கான்

20100817

ISSN 2012 - 7561

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org